# 6B செயல்முறைப் பகுதி

("போதுமான கற்பித்தல் கற்றல் வடிவங்களைத் தேர்வு செய்தல்" அத்துடன் 4B, 5B, 7B, 8B, 9B, 10B, 11B, 12B இயல்களில் பாடத் திட்டமிடல் ஆகியவற்றின் தலைப்பு ஒப்பீடுகள்!)

## 1. கெமைல் சல்லகு: பல்வேறுபட்ட கற்பித்தல் மற்றும் சமூக வடிவங்களை "தோழமை, முன் கருத்தாக்கங்கள், ஒற்றுமையான வாழ்க்கை" என்ற தலைப்புடனான இரட்டைப் பாட வேளையின்போது நடைமுறைப்படுத்தல், 5-10 வகுப்புகள்.

கெமைல் சல்லகு கொசொவாவைச் சேர்ந்தவர். அவர் 22 ஆண்டுகள் ஜேர்மனியில் (ஆர்ன்ஸ்பேர்க், வடக்கு-றைன்-வெஸ்ற்பாலியா) வாழ்ந்துவருகிறார். 17 ஆண்டுகளாக அல்பானியன் பா.மொ.க ஆசிரியராக கற்பித்துள்ளார்.

### தொடக்கக் கருத்துகள்

இரட்டைப்பாட சூழ்நிலை "பள்ளியில் (ஒன்றான) வாழ்வு" என்ற தலைப்பில் நடாத்தப்படும்..

கற்றல் குழுவானது 5-10 வகுப்புகளிலிருந்து 15 பெண்கள், 11 ஆண்கள் உள்ளடக்கப்படுகிறது. பள்ளி நாளில் 7 ஆவது மற்றும் 8 ஆவது பாடவேளை வகுப்பு நடைபெற்றாலும் மாணவர்கள் தன்னிச்சையாகவே பா.மொ.க வுக்கு சமுகம் தருவதுடன் அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். மாணவர்களின் செயற்றிறனானது பல்வகைப்பட்டது.

பாடத்தலைப்பானது மாணவர்களின் பட்டறிவு மற்றும் அவர்கள் வாழும் சூழலுடன் நெருக்கமான தொடர்புடையது. இது தொடர்பாடல் கற்றல் வடிவங்களின் பயன்பாட்டுக்குச் சாலப் பொருத்தமானது. பல்வேறுபட்ட மாணவர் குழுக்கள் ஒரு கருப்பொருளின் ஒரு கூறு பற்றிக் கலந்துரையாடி பிற்பாடு அவர்களின் நுண்ணறிவினை புதிதாக உருவாக்கப்பட்ட கலப்புக் குழுக்களில் ஒன்றாகச் சேர்த்து பகிர்ந்துகொள்ளும் "நிபுணர் குழு" கற்பித்தல் முறையை நான் பெரும்பாலும் விரும்புகின்றேன்.

### இலக்குகள்

- உள்ளடக்கத்தொடர்பு: மாணவர்கள் ஒன்றாக சேர்ந்து ஒன்றாக வாழ்வதைப் பற்றியும் தோழமை பற்றியும் அதே போன்று சார்புக் கருத்துக்கள், சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை அவர்கள்தம் உண்மை வாழ்வுடன் தொடர்புறுத்தி கலந்துரையாடவேண்டும்.
- சமூக அடிப்படையில்: தலைப்பின் அடிப்படையில், பெரும்பாலும் பல்வகைப்பட்ட செயற்றிறன் குழுக்களில் செயற்படும்போது மாணவர்கள் ஒருவருக்கொருவர் அக்கறைகொள்ளவும் ஒருவருக்கொருவர் பக்கத்துணை செய்யவும் கற்றுக்கொள்ளவேண்டும்..
- மொழியியல் அடிப்படையில்: வாய்மொழி ஊடாக (குறிப்பிட்ட அளவில் எழுத்து ஊடாகவும்) கடினமான தலைப்புகள் தொடர்பாக தம்முடைய எண்ணங்களை வெளிப்படுத்த முடியுமாக இருத்தல்.
- கற்றல் நடத்தை மற்றும் உத்திகள் அடிப்படையில்: மாணவர்கள் வேறுபட்ட கற்றல் உத்திகள் பற்றியும் கற்றல் முறைகள் பற்றியும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

### கருவிகள்

படிப்பதற்கான எழுத்துரு "Ani pianistja" (Ani, the pianist), வினாக்கள் மற்றும் வினாக்களுக்கான தூண்டிகளுடன் எழுத்துருவும் பணித்தாளும்.
http://issuu.com/e-ucebnici/docs/gjuha_4_maq_ok/27)

## இரட்டைப்பாடவேளை கற்கைநெறி

| நேரம் | உள்ளடக்கம் | கற்பித்தல் / கற்றல் வடிவம் |
|---|---|---|
| 5′ | வரவேற்பு, அறிமுகம்: இரட்டைப் பாடவேளையின் தலைப்பு தொடர்பான தகவல், தோழமை, முன் கருத்தாக்கங்கள், ஒற்றுமையான வாழ்வு. | • உள்ளீடு / தகவலளிக்கும் அறிமுகம் |
| 15′ | வகுப்பு கலந்துரையாடலை ஏற்பாடு செய்தல்:<br>மாணவர்கள் 3 குழுக்களாக பிரிக்கப்படுவர். ஒவ்வொரு குழுவும் பின்வரும் தூண்டிகளுள் ஏதாவதொன்றினைக் கலந்துரையாடி அது பற்றிய ஒரு சிறிய (5′) எடுத்துரைப்பினையும் திறவுச் சொற்களுடனான ஒரு "சுவரொட்டி" யையும் (A3) ஏற்பாடு செய்வர்:<br><br>அ) நட்பு என்றால் எனக்கு எதனை உணர்த்துகிறது? (கடுமையாக்குதல் / கூடுதலாக: நட்பு இன்றி வாழ்வு எப்படி இருக்கும்? )<br>ஆ) பக்கச் சார்பினை நான் ஏற்கெனவே எங்கே? எப்போது எவ்வாறு முகங்கொடுத்தேன்? (கடுமையாக்குதல் / கூடுதலாக: நான் பக்கச்சார்புக்கு உட்பட்டேன், ஏன்? )<br>இ) வேறுபட்ட பண்பாட்டை உடைய மக்கள் இணைந்து வாழ்கின்றபோது உள்ள நன்மைகளையும் தீமைகளையும் நாம் எங்கு காணலாம்? | • குழுச்செயற்பாடு*) (கலந்துரையாடல், பொது உடன்பாட்டை அடைதல், "சுவரொட்டி" ஒன்றை ஏற்பாடு செய்க)<br>*) பெரிய வகுப்புகளில் ஒவ்வொரு தூண்டிக்கும் இரு குழுக்களை எளிதாக ஆக்கலாம்! |
| 30′ | மூன்று குழுக்களும் தமது சுவரொட்டி ஊடான கருத்துகளை முன்வைப்பதற்கான நேரத்தை எடுத்துக்கொள்வர் (ஒவ்வொரு குழுவும் 5′) அதனைத்தொடர்ந்து வினாக்களுக்கும் கருத்துக்களுக்குமான நேரம் 4′. முடிந்த அளவில் ஒரு சிறிய சுருக்கத்துடன் நிறைவுசெய்க. | • குழு எடுத்துரைப்பு<br>• வகுப்புக் கலந்துரையாடல் |
| | இடைவேளை | |
| 25′ | மேலுள்ள (அ), (ஆ), (இ), குறிப்பிட்ட மூன்று குழுக்களிலும் இருந்து 2-3 மாணவர்களை உள்ளடக்கிய மூன்று "வல்லுநர் குழுக்களை" உருவாக்குக.<br><br>ஒப்படை:<br>1. தனியாள் வேலை (5′): ஒவ்வொருவராக, தனியாக, பின்வரும் வினா பற்றி எண்ணுக: பின்வரும் கருப்பொருள்கள் எவ்வாறு தொடர்புபட்டுள்ளன: "நட்பு", "பக்கச்சார்பு", மற்றும் "இணைந்து வாழ்தல்"? குறிப்புகள் எடுக்கவும்.<br>2. குழுவில் உங்கள் எண்ணங்களைக் கலந்துரையாடுக. உங்கள் உருக்காட்டல்களை சில வாக்கியங்களில் சுருக்கிக் கூறி முன்வைக்கவும். ஒருங்கிணைத்து சிறு சுருக்கம் தயாரித்து அதனைப் பெரிய எழுத்துக்களில் A3 தாளில் எழுதவும். அதற்குப் பொருத்தமான தலைப்பினைக் கண்டுகொள்க. | • தனியாள் வேலை<br>• 3 "வல்லுநர் குழுக்களில்"*) கலந்துரையாடல்.<br>• இணைந்து எழுதுதல் / ஒப்படையைப் பதிப்பித்தல்<br>*) பெரிய வகுப்புகளில், 6 வல்லுநர் குழுக்களை உருவாக்குதல் எளிதாகும்! |
| 15′ | ஒவ்வொரு குழுவும் தங்கள் ஒப்படை தொடர்பாக ஒரு சிறிய எடுத்துரைப்புச் செய்கிறது, ஏனைய மாணவர்கள் வினாக்களை வினவலாம் அல்லது கருத்து தெரிவிக்கலாம். | • குழு எடுத்துரைப்பு<br>• வகுப்பு கலந்துரையாடல். |
| 10′ | 3 சுவரொட்டிகளும் சுவரில் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஆசிரியர் நிறைவுக் கலந்துரையாடலுக்கான பின்வரும் தூண்டியினை வழங்குவார்:<br>இங்கு நீங்கள் எழுதியுள்ளவை, குறிப்பாக உங்கள் புதிய வாழிடச் சூழலுக்குப் பொருந்துமா, அல்லது இதேபோல் உங்கள் பிறப்பு நாட்டில் பொருந்துமா?<br><br>- 2′ தனியாகவோ இணையராகவோ உருக்காட்டுதற்கு ஒதுக்கவும். தொடர்ந்து,<br>- பொது அவையில் கலந்துரையாடல் (வேண்டுமெனில் அடுத்த முறை தொடரலாம்)<br><br>வீட்டுவேலை: இந்த தூண்டி தொடர்பில் உங்கள் கருத்துக்களை எழுதவும் எழுத்தாக்கத்தினை (பக்கம் ½ - 1) அடுத்த வகுப்புக்குக் கொண்டுவரவும். | • தனியாள் உருக்காட்டல்<br>• வகுப்பு கலந்துரையாடல். |

II

## 2. சகினே கொச் "விழாக்களும், விடுமுறைகளும்" என்ற தலைப்பில் ஓர் அலகில் வேறுபட்ட கற்றல், கற்பித்தல் முறைகள் பற்றி ஆய்வுசெய்கிறார்.

சகினே கொச் துருக்கியைச் சேர்ந்தவர். ஐந்து ஆண்டுகளாக சூரிச்சில் வாழும் இவர் பா.மொ.க வகுப்புகளில் கற்பித்துவருகிறார்.

### தொடக்கக் குறிப்புரை

துருக்கிப் பண்பாட்டில் விடுமுறைகள். நீண்ட மரபினைக் கொண்டுள்ளது. பெரும்பாலான துருக்கி விடுமுறைகள் தேசிய அடிப்படையிலான இன்றியமையாத நிகழ்வுகளை நினைவு கொள்கின்றன. Apirl 23ம் திகதி சுதந்திரத்தையும், சிறுவர்கள் நாளையும் கொண்டாடுகின்றோம். சுவிற்சர்லாந்து துருக்கிஷ் பா.மொ.க வகுப்புகளில், நாமும் ஒவ்வோராண்டும் இலைதுளிர் காலத்தில் இவ் விடுமுறையைக் கொண்டாடுகின்றோம். சமயம் சார் விடுமுறைகளும், விழாக்கள் தொடர்பான விடுமுறைகளும் இக்கற்பித்தல் அலகுடன் தொடர்புடையன அல்ல அவை தனியாகக் கருதப்படும்.

விழாக்களும் கொண்டாட்டங்களும் என்னும் தலைப்புத் தொடர்பாக, துருக்கிஷ் சுவிஸ் பண்பாடுகளில் மாணவர்கள் தம் பட்டறிவுகள், அவற்றுடன் இரு பண்பாடுகளிலும் விடுமுறைகளுக்கான பின்னணித் தகவல்கள் ஆகியனவற்றை கருத்திற் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். ஆகவே, கருப்பொருள் வேறுபட்ட கற்றல் கற்பித்தல் முறைகளில் பயன்படுத்தவும் பல்பண்பாட்டு அணுகுமுறைக்கும் சிறப்பாகப் பொருந்தும்.

ஒழுங்கமைப்புச் சிக்கல்கள், காலவரையறை: கற்பித்தல் அலகு மூன்று கிழமைகளில் நடைபெறக்கூடிய 51 ½ பாடங்களை உள்ளடக்கியுள்ளது. முதல் வாரத்தில் இறுதி மணித்தியாலயத்தில் மாணவர்கள் "ஆய்வு ஒப்-படை" பெறுவார்கள் குழுக்களாக இணைந்துகொள்வார்கள், இரண்டாவது கிழமையில், "விழாக்களும் விடுமுறைகளும்" என்னும் தலைப்பில் எடுத்துரைப்புகள் ஆக்குதற்கு இரண்டு பாடங்களும் விடப்படுகின்றன, மூன்றாவது கிழமையில், எடுத்துரைப்புகள் வழங்கப்படுகின்றன மற்றும் மதிப்பிடப்படுகின்றன.

### இலக்குகள்

- உள்ளடக்கத் தொடர்பு: மாணவர்கள் அவர்களின் துருக்கிஷ் மற்றும் சுவிஸ் கலாச்சாரத்தின் விழாக்கள் மற்றும் விடுமுறைகள் தொடர்பான பின்னணி அறிவினை விரிவுபடுத்துவர். இரண்டு பண்பாட்டு நிகழ்வுகளையும் ஒப்பிட்டு நோக்குவதுடன் ஒற்றுமைகள், வேற்றுமைகள் பற்றிய தங்கள் கருத்துக்களை பரிமாறுவர், அதனூடாக தங்கள் பல்பண்பாட்டுத் தகைமையினை பெருக்கிக்கொள்வர்

- மொழியியல் அடிப்படையில்: மாணவர்கள் தங்கள் வாய்வழி மற்றும் எழுத்து திறன் தரத்தினை வளர்த்துக்கொள்வர் (படித்தலும் எழுதுதலும், மற்றும் வாய்வழி எடுத்துரைப்பு). அவர்கள் மொழி ஒப்பீடு மற்றும் பெயர்கள் மொழிபெயர்ப்பு (விழா மற்றம் விடுமுறைப் பெயர்கள்)ஆகியன பற்றிய வினாக்களுடன் உணர்திறன் கொண்டவர்களாவர். அவர்கள் தங்கள் ஊடகத் தகைமையினைக் கட்டியெழுப்புவர் (இணையத் தேடல்கள்).

- சமூகம் மற்றும் கற்றல் - சார்புடைய: வேண்டுமென்றே பயன்படுத்தப்பட்ட பல்வகை கற்பித்தல் கற்றல் நெறிமுறைகளின் விளைவாக மாணவர்கள் தங்கள் தன்னம்பிக்கை அத்துடன் தங்கள் கூட்டுறவு முறைகள் மற்றும் கற்றல் கையகப்படுத்தும் மதிநுட்பங்கள் ஆகியனவற்றை விரிவுபடுத்துவர். மேலும் இது அவர்கள் முயற்சியை மேம்படுத்தும்.

### கருவிகள்

ஆசிரியர் துருக்கி, சுவிற்சர்லாந்தில் (உள்ளடக்கப்பட்ட உள்ளூர் மற்றும் மாநில விழாக்கள்) உள்ள உள்ளூர் மற்றும் தேசிய விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களுடன் முன்கூட்டியே பழக்கமுள்ளவராக இருக்கவேண்டும் மற்றும் மாணவர்கள் அவை பற்றிய தேவையான தகவல்களை எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம் என அறிந்திருக்க வேண்டும் (பார்க்கவும் இணையத்தள இணைப்புகள்.).

கணினி மூலமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மாணவர்களிடம் இணையத்தள வசதிகளுடன் கூடிய கணினிகள் இருப்பதை ஆசிரியர் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

முதலாம் இரண்டாம் கிழமைகளுக்கிடையில் மாணவர்களின் "ஆய்வு" தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல்களுடன் கூடிய பணித்தாள்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இப் பணித்தாள்கள் மூன்று வேறுபட்ட திறமை நிலைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

## செய்முறை

| நேரம் | உள்ளடக்கம் | கற்பித்தல் / கற்றல் நெறிமுறை |
|---|---|---|
| கிழமை 1, இறுதி அரை மணித்தியாலம் | | |
| 30′ | துருக்கி, சுவிற்சர்லாந்து "விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள்" என்ற ஆய்வுத் திட்டத்தை ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். இரண்டு பண்பாடுகள் மொழிகளின் வள நன்மைகளை வலியுறுத்தல் அடுத்த கிழமையில் முடிக்கப்பட வேண்டிய ஆய்வு ஒப்படை தெளிவாக விளக்கப்படுகின்றது, மாணவர்கள் வகுப்புக்கு என்ன கொண்டுவர வேண்டுமென்பதும் சொல்லப்படுகின்றது (தகவல், துருக்கிஷ், சுவிஸ் விழா, கொண்டாட்டம் பற்றி ஒவ்வொன்றுக்குமான படங்கள்). ஒப்படைகள் எழுத்தில் மூன்று திறன் மட்டங்களுக்காக பகிரப்படுகின்றன. வினாக்கள் மற்றும் ஒழுங்கமைப்புச் சிக்கல்கள் பற்றிய தெளிவுறுத்தல் (இரண்டு குழுக்களை உருவாக்கல், கணினி பயன்பாடு, இணையத் தேடல்களுக்கான மதிநுட்பங்கள், முதலியன). | • ஆசிரியரின் உள்ளீடு<br>• வினாக்கள் மற்றும் ஒப்படை ஒழுங்கமைப்பு பற்றிய தெளிவுறுத்தல் தொடர்பான கலந்துரையாடல். |
| 1 ஆம் 2 ஆம் கிழமைகளுக்கிடையிலான நேரம் | | |
| | இரண்டாம் குழுக்களாக பிரித்து துருக்கி, சுவீடன், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் தொடர்பில் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஆய்வினை மேற்கொள்ளல். | • தனியாள் செயற்றிட்டம், ஆய்வு இணைத்தல் மற்றும் ஏனைய வளங்களைப் பயன்படுத்தல். |
| 2ஆம் கிழமை இரு பாடத்திட்டம் | | |
| 15′ | ஆய்வின் ஊடாக மாணவர்கள் அறிக்கை சமர்ப்பித்தல், என்ன நன்மைகள், என்ன சவால்கள், என்ன பிரச்சினைகளை எதிர்கொண்டார்கள், என்ன நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டும். பின்னூட்டல், பரிதுரைகள், கற்றல் நுட்பங்கள். | • சுருக்கமான அறிக்கைகள் கலந்துரையாடல்கள் பின்னூட்டல்கள். |
| 15′ | பணித்தாள்:<br>a) சுவிஸ், துருக்கியின் பண்டிகைகள், கொண்டாட்டங்கள் தொடர்பில் தகவல்களை திரட்டி குறுகிய அறிக்கை தயாரித்து முன்னிலைப்படுத்தல், முன்வைப்பு 5 உள்ளடக்கங்களை கொண்டு போஸ்டர், A3 அளவு அல்லது A2 படங்கள், மற்றும் எழுத்து மூலமாக.<br>b) வினாக்களை கொண்ட செயற்தாள் ஒன்றை தயாரித்து 3-4 வினாக்கள். | • உள்ளீடு<br>• உள்ளடக்கங்களைத் தெளிவுப்படுத்தல்<br>• முன்னிலைப்படுத்தல் தொடர்பில் கலந்துரையாடல். |
| 50′ | ஒப்படை தொடர்பில் பணிகளை தொடர்தல் முன்னிலைப்படுத்தலை தயாரித்தல், மேலதிக தகவல்கள் தேவைப்படின் ஆசிரியர்கள் அறிவுறுத்தல்களை வழங்கி உதவிசெய்தல். | • தனியாள் செயற்பாடு குழுச் செயற்பாடு |
| 15′ | கலந்துரையாடல் / அடுத்தவார முன்னிலைப்படுத்தல் தொடர்பில் வினாக்களை தெளிவுப்படுத்திக் கொள்ளல், முன்னிலைப்படுத்தல் தொடர்பான மதிப்பீடிற்கு தயாரித்தல். | • உள்ளீடு கலந்துரையாடல் |
| 2ஆம் 3ஆம் கிழமைகளுக்கிடையிலான நேரம் | | |
| | எடுத்துரைப்பு நிறைவு (சுவரொட்டி மற்றும் பணித்தாள் உட்பட) | • சுயாதீனமான வேலை |
| 3ஆம் கிழமை இரு பாடத்திட்டம் | | |
| 10′ | சுருக்கமான அறிமுகம் முன்னிலைப்படுத்தல் தொடர்பான மீளாய்வு, இறுதி வினாவினை தெளிவுபடுத்தல். | • உள்ளீடு |
| 60′ | முன்னிலைப்டுத்தல், 5′ ஒவ்வொருவருக்கும் 5 வினாக்கள் சுருக்கமான கலந்துரையாடல் மதிப்பீடு, நேரம் போதாமையாக இருப்பின் மீதமுள்ள முன்னிலைப்படுத்தல்கள் அடுத்த முறை தொடரும். | • தனியாள் செயற்றிட்டம் (தனி / குழு)<br>• முழு செயற்பாடு (தனி / குழு) |
| 20′ | இறுதி கலந்துரையாடல் ஒற்றுமைகள், வேற்றுமைகள் இனங்காணல் எவ்வாறு கொண்டாடப்படுகிறது ஆய்வுத்திட்டத்தின் மீளாய்வு மாணவர்கள் எவ்வாறு விருப்புடன் அணுகினார்கள் என மதிப்பிடல். | • வகுப்பு கலந்துரையாடல்<br>• மதிப்பீடு |